நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

## C.C. No. 246/2024

## P.W.11 –ன் வாக்குமூலம்

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ராஜா |
| தந்தை / கணவர் பெயர் | : | கோவிந்தன் |
| கிராமம் | : | பி.என்.பட்டி |
| வட்டம் | : | மேட்டூர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 11** |
| வயது | : | 52 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், செப்டம்பர் மாதம், 04–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரிகள் ஆஜர் இல்லை. அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–12.40PM )

1. நான் தற்போது மேட்டூர் நெடுஞ்சாலை ரோந்து பிரிவில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 23.01.2024 ம் தேதி கொளத்தூர்

காவல் நிலையத்தில் நிலைய அலுவலில் இருந்தபோது சுரேஷ்குமார் வனச்சரகர் அலுவலர் கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று கொளத்தூர் காவல் நிலைய குற்ற எண்.21/2024 ச.பி. 294(பி), 353, 506(1) இ.த.ச வின் கீழ் வழக்கு பதிவுசெய்து முதல் தகவல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பியும் சம்மந்தப்பட்ட நகல்களை உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும் புலன் விசாரணை மேற்கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. 23.01.2024 ம் தேதி 14.30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் விஜய், முருகேசன் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **( பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் அசாஆ.5 மற்றும் அசாஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. வனச்சரகர் சுரேஷ்குமார், சதீஷ், பத்ரன், நல்லதம்பி, கோகுலகண்ணன், கண்ணம்மாள், ஈஸ்வரி, ராசம்மாள், முருகேசன், விஜய் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவுசெய்தேன். மேற்பார்வைக்கு காவல் உதவி ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. காவல் நிலையத்திற்கு இந்த சம்பவம் தொடர்பாக 23.01.2024 ம் தேதி 14.00 மணிக்கு எனக்கு தகவல் கிடைத்தது. 22.01.2024 ம் தேதி இரவு 08.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. என்னிடம் புகார் 23.01.2024 ம் தேதி 14.00 மணிக்கு கொடுக்கப்பட்டது. புகார் கொடுத்தவர் அரசு அதிகாரிதான் என்றால் சரிதான். இந்த சம்பவம் தொடர்பாக 23.01.2024 ம் தேதி 14.00 மணிக்கு முன்பாக எந்த தகவலும் பெறப்படவில்லை.

2. இந்த சம்பவம் தொடர்பாக 23.01.2024 ம் தேதி 14.00 மணிக்கு முன்பாக போன் மூலமாகவோ, குறுஞ்சசெய்தி மூலமாகவோ ஏதாவது தகவல் கிடைக்கப்பட்டதா என்றால் இல்லை. 22.01.2024 ம் தேதி சுமார் இரவு 08.00 மணிக்கு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் தொலைபேசியில் தகவல் கொடுத்தார். நான்

முன்னுக்கு பின் முரணாக பதிலளிக்கிறேன் என்றால் எனக்கு சரியாக நியாபகம் இல்லை.

3. சம்பவயிடத்திற்கு யார்யார் சென்றோம் என்று எனக்கு நியாபகம்இல்லை. சம்பவயிடத்திற்கு 22.01.2024 ம் தேதி இரவு சுமார் 08.00–08.30 மணிக்கு சென்றோம். காவல் துணை கண்காணிப்பாளர் தகவல் கொடுத்ததன் பேரில் சம்பவயிடத்திற்கு சென்றோம். புகார் எதுவும் அப்போது கொடுக்கப்படவில்லை. காவல் துணை கண்காணிப்பாளருக்கு இந்த சம்பவம் தொடர்பாக ஏதாவது புகாரோ, குறுஞ்செய்தியோ வந்ததன் அடிப்படையில் நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றோமா என்றால் இல்லை.

4. சம்பவயிடத்திற்கு சுமார் 2 பேர் சென்றோம். சம்பவயிடத்தில் நாங்கள் சென்றபோது கருங்கல்லூர் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் சின்னப்பன், அவருடைய வாகன ஓட்டுநர் ஆகியோர் இருந்தனர். அவர்களை தவிர வனத்துறையினர் சுமார் 4 பேரும், பொதுமக்கள் சுமார் 2–3 பேர் இருந்தனர். எதிரிகளை அப்பொழுதே காவல் நிலையத்திற்கு அழைத்து வந்தோமா என்றால் இல்லை. நாங்கள் சம்பவயிடத்திற்கு சென்றபோது எதிரிகள் இருவரும் சம்பவயிடத்தில் இல்லை.

5. தற்பொழுது நீதிமன்ற சாட்சியத்தில் நான்காவது பாராவில் எதிரிகள் அங்கிருந்தார் என்று கூறிவிட்டு அதே பாராவில் எதிரிகள் அங்கு இல்லை என்றும் முன்னுக்கு பின் முரணாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தபோது சம்பவயிடத்திற்கு சென்ற பிறகு அடுத்தநாள் 23.01.2024 ம் தேதி மதியம் 14.30 மணிக்கு சம்பவயிடம் சென்றேன். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். விஜய், முருகேசன் ஆகியோர்களை மகசர் சாட்சியாக வைத்து மேற்படி ஆவணங்களை தயார் செய்தேன்.

6. மேற்படி மகசர் சாட்சிகளை சம்பவயிடத்தில் வைத்துதான் விசாரணை செய்தேன். மேற்படி இருவரும் சம்பவத்தை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து மட்டும்தான்

செய்ததாகவும் சொல்லியிருந்தால் அது தவறு. இவ்வழக்கில் விசாரணை செய்யப்ட்ட தனிநபர் சாட்சிகள் அனைவரும் இந்த வழக்கை பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று சாட்சியம் அளித்துள்ளதாலும், மேற்படி அவர்களை தவிர மற்ற சாட்சிகள் அரசு ஊழியர்கள் என்பதாலும், அவர்கள் கொடுத்தபுகாரின் அடிப்படையில் சரிவர விசாரணை செய்யாமல் தவறான முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்து, தற்போது உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

7. வனத்துறை சம்மந்தப்பட்ட சாட்சிகளை காவல் நிலையத்தில் வைத்துதான் விசாரித்தேன். மேற்படி சாட்சிகளை 23.01.2024 ம் தேதி மதியம் 02.00 மணிக்கு விசாரணை செய்தேன். மகசர் சாட்சிகளை சம்பவயிடத்தில் வைத்து அன்று மதியம் 02.30 மணிக்கு விசாரணை செய்தேன். காவல் நிலையத்தில் சாட்சிகளை விசாரித்த பின்னிட்டுதான் சம்பவயிடம் சென்று மகசர் சாட்சிகளை விசாரித்தேன் என்றால் சரிதான்.

8. இந்த வழக்கு கருங்காலி கட்டை சம்மந்தப்பட்டது என்றால் சரிதான். இந்த கருங்காலி கட்டையை நான் சம்பவயிடத்தில் பார்த்தேன். அந்த கருங்காலி கட்டையை நான் கைப்பற்றவில்லை. அந்த கட்டை கருங்காலி கட்டைதான் என்று நான் தெரிந்துகொள்ளவில்லை. அந்த கருங்காலி கட்டையை வனச்சரகர் அலுவலர்கள் தான் எடுத்துச்சென்றார்கள்.

9. மேற்படி வனச்சரகர் அலுவலர் அதுசம்மந்தமாக வழக்கு பதிவுசெய்யப்பட்டு சம்மந்தப்பட்ட நபர்கள் அபராதம் செலுத்தியதாக எனக்கு வாய்மொழியாக தகவல் தெரிவித்தார்கள். அந்த வழக்குப்பற்றி நான் விசாரித்து தெரிந்துக்கொள்ளவில்லை. அதுசம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

10. இந்த வழக்கில் நான் முழுமையாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த அளவுக்கும் நான் சாட்சிகளை உரிய முறையில் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல.நான் சம்பவயிடத்திற்கு சென்றபோது கிராம நிர்வாக அலுவலர் அங்கு இல்லை. காவல் நிலையமும் இந்த சம்பவம்

தொடர்பாக கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை.

11. நான் சொல்வது பொய் என்றாலும், வனத்துறை அலுவலர் சாட்சியங்கள், கிராம நிர்வாக அலுவலர் சம்பவயிடத்தில் சம்பவம் முடியும் வரையும் மறுநாள் காவல நிலையத்தில் புகார் கொடுக்க வரும்போதும் கிராம நிர்வாக அலுவலர் அவர்களுடன் இருந்ததாகவும், சாட்சியம் அளித்திருக்கிறார்கள் என்றாலும், நான் உண்மையில் சம்பவயிடத்திற்கு போகாததால்தான் கிராம நிர்வாக அலுவலர் வரவில்லை என்று சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

12. ஒரு பொய்யான புகாரினை பெற்று சம்பவியடத்திற்கு போகாமலும், சாட்சிகளை விசாரணை செய்யாமலும், அரசு அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க காவல் நிலையத்தில் வைத்து ஆவணங்களை தயார் செய்து ஒரு பொய்யான வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றாலும் சரியல்ல.

13. எதிரி அந்த ஊரில் பொதுமக்கள் மத்தியில் செல்வாக்கு மிகுந்த நபர் என்றால் சரிதான். அவருடைய நற்பெயருக்கு கலங்கம் ஏற்படுத்தும விதமாக அரசு ஊழியர்கள் கொடுத்த பொய் புகாரின் பேரில் பொய் வழக்கு பதிவுசெய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(01.15PM)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/- நா. கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**